என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும்

நிதி - வணிகம் - முதலீடு

(தனிச் சுற்றுக்கு மட்டும்) மலர் - 1, இதழ் - 8, 1.11.2026 பக்கம்: 21 மின்னிதழ்



இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

என் .கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தில் உறுதுணையாக இருக்கும் மதிப்பிற்குரிய பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், இயக்குநர்கள் மற்றும் அன்பிற்குரிய அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் எங்களது இதயம் கனிந்த

தீபாவளி நல்வாழ்த்துகளை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்,

நிதி-வணிகம்-முதலீடு (மின்னிதழ்)

NKC e-magazine



கணவன், மனைவி இருவரும் சேர்ந்து வணிகம் தொடங்குபவர்களுக்கான நிதி திட்டமிடல்



நெற்குப்பை **சேதுராமன் சாத்தப்பன்**
Advisor,
NKC Finance Private Limited

தம்பதிகள் ஒன்றாக வணிகம் தொடங்கும்போது, நிதி திட்டமிடல், காப்பீடு, வரி நன்மைகள் மற்றும் தனிப்பட்ட இலக்குகளை கவனித்துக்கொள்வது அவசியம். இது ஒரு வலுவான நிதி அடித்தளத்தையும், ஆரோக்கியமான உறவையும் உறுதிப்படுத்தும்.

அவர்கள் இணைந்து ஒன்றாக வணிகம் தொடங்கும் போது ஒரு உற்சாகமான ஆனால் நிதி ரீதியாக சவாலான பயணத்தை எதிர்கொள்கிறார்கள். Shared goals உறவுகளை வலுப்படுத்தும்

என்றாலும், unmanaged financial planning பிரச்சினைகளை உருவாக்கும். எனவே, வணிக வெற்றி மற்றும் தனிப்பட்ட நல்லிணக்கத்திற்கு கவனமான நிதி திட்டமிடல் முக்கியமானது.

நிதி சவால்களை வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக மாற்றுவது முக்கியம். இது உங்கள் உறவையும் தொழில்முனைவு முயற்சிகளையும் வலுப்படுத்தும்.

தம்பதிகள் ஒன்றாக வணிகம் தொடங்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய நிதி திட்டமிடல் காரணிகள் இங்கே உள்ளன.

தம்பதிகள் எப்படி ஒரு வலுவான நிதி safety net உருவாக்கலாம்?

வணிகம் நடத்துவது நிச்சயமற்ற தன்மையுடன் இருக்கும், எனவே ஒரு நிதி safety net அவசியம். ஆனால் இங்கே ஒரு விஷயம் இதற்கு எமர்ஜென்சி ஃபண்ட் மட்டும் போதாது. தனிப்பட்ட மற்றும் வணிக செலவுகளுக்கு தனித்தனி எமர்ஜென்சி ஃபண்ட் வைத்திருப்பது சிறந்தது.

ஒன்றாக வணிகம் தொடங்கும் தம்பதிகள் தனிப்பட்ட செலவுகளை ஈடுகட்ட மூன்று முதல் ஆறு மாதங்களுக்கான செலவுகளை சேமிக்கும் வகையில் ஒரு எமர்ஜென்சி ஃபண்டை உருவாக்குவதை முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும். இந்த பாதுகாப்பு, வணிக வருவாய் நிச்சயமற்றதாக இருந்தாலும், தனிப்பட்ட அவசரநிலைகளுக்கு அவர்கள் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தும்.

வணிகத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கப் போனால் உங்கள் வணிகம் பொருளாதார ஏற்ற இறக்கங்களால் பாதிக்கப்படக்கூடியதாக இருந்தால், ஒரு அல்லது இரு வருடத்திற்கான செலவுகளை ஈடுகட்டும் வகையில் ஒரு இருப்பை பராமரிப்பது புத்திசாலித்தனமானது. கோரோனா காலத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். பல வணிகங்கள் இந்த வகையான பண்டுகள் இல்லாமல் மூடப்பட்டன என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இந்த நிதியை liquid assets களில் முதலீடு செய்வதன் மூலம் லாபத்தை அதிகரிக்கலாம். எடுத்துக்காட்டாக, கடன் நிதிகள் liquidity யையும், மிதமான வருவாயையும் வழங்குகின்றன.

தனித்த நிதி, வலுவான கூட்டணி

இருவரும் ஒரு நிலையான சம்பளத்தை எடுத்துக் கொள்வது முக்கியம்.

இது உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஊடுருவாமல் அல்லது தேவையற்ற நிதி அழுத்தத்தை உருவாக்காமல் இருக்கும் வகையில் நிலையான தொகையாக இருக்க வேண்டும்.

காப்பீடு செய்வதை மறக்காதீர்கள்

ஒன்றாக வணிகம் தொடங்கும் தம்பதிகள் தனிப்பட்ட மற்றும் வணிக நலன்களை பாதுகாக்க காப்பீட்டை முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும்.

ஒன்றாக வணிகம் தொடங்கும் தம்பதிகளுக்கு இரண்டு அத்தியாவசிய தனிப்பட்ட காப்பீட்டு வகைகள் உள்ளன. அவை டெர்ம் லைஃப் காப்பீடு மற்றும் ஹெல்த் இன்சூரன்ஸ் காப்பீடு.

டெர்ம் லைஃப் காப்பீடு எதிர்பாராத சூழ்நிலைகளில் குடும்பத்தின் நிதி பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது, முக்கியமான நேரத்தில் அவர்களின் நலனை பாதுகாக்கிறது.

சுகாதார காப்பீடு சமமாக முக்கியமானது, ஏனெனில் இது சேமிப்புகளை குறைக்காமல் மருத்துவ செலவுகளை ஈடுகட்டுகிறது. குடும்ப ஃப்ளோட்டர் சுகாதார காப்பீட்டு திட்டம் எடுத்து கொள்ளலாம். இது ஒரு திட்டத்தின் கீழ் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் விரிவான கவரேஜை வழங்குகிறது.

வணிகத்தின் கண்ணோட்டத்தில், காப்பீடு சொத்து சேதம், பொறுப்பு, டிஜிட்டல் மோசடிகள் மற்றும் தரவு இழப்பு போன்ற அபாயங்களை குறைக்கும்.

வரி சேமிப்பு வாய்ப்புகளை பயன்படுத்துங்கள்

இந்தியாவில் வணிகம் தொடங்கும் தம்பதிகள் பல்வேறு வரி நன்மைகளை பயன்படுத்தி தங்கள் நிதி சுமையை குறைக்கலாம். வணிக தொடர்பான செலவுகள், கடன் வட்டி, வாடகை, ஊழியர் சம்பளம், சட்ட செலவுகள் மற்றும் பயன்பாடுகள் போன்றவற்றை இன்கம் டேக்ஸ் சட்டத்தின் பிரிவு 37-இல் கழிக்கலாம்.

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் தேய்மானத்தை பிரிவு 32-இல் கோரலாம், இது வரி விதிக்கக்கூடிய வருமானத்தை குறைக்கும்.

பழைய வரி முறையின் கீழ், தனிநபர்கள் ப்ராவிடெண்ட் ஃபண்ட்

மற்றும் பப்ளிக் ப்ராவிடெண்ட் ஃபண்டுக்கான பங்களிப்புகளுக்கு பிரிவு 80C-இன் கீழ் மற்றும் தங்கள் குடும்பத்திற்கான சுகாதார காப்பீட்டு பிரீமியங்களுக்கு பிரிவு 80D-இன் கீழ் விலக்குகளை கோரலாம்.

இந்த வரி நன்மைகளை பயன்படுத்துவதன் மூலம், தம்பதிகள் தங்கள் வரி பொறுப்பை கணிசமாக குறைக்கலாம், இது வணிக அடித்தளத்தை உருவாக்கவும், தங்கள் நிதி எதிர்காலத்தை பாதுகாக்கவும் உதவும்.

தற்போது இன்கம்டாக்ஸ் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

ஓய்வு கால நிதியை புறக்கணிக்காதீர்கள்

உங்கள் ஓய்வூதியத்திற்காக முதலீடு செய்வது, குழந்தைகளின் கல்வி, வீடு வாங்குதல் அல்லது செல்வம் சேகரிப்பது போன்ற தனிப்பட்ட இலக்குகளை முன்னுரிமையாகக் கொள்வது அவசியம்.

இந்த இலக்குகளை அடைய, உங்கள் சம்பளத்தின் ஒரு பகுதியை வழக்கமாக ஒதுக்கலாம்.

நிதி - வணிகம் - முதலீடு

பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நிதி - வணிகம் - முதலீடு மின்னிதழ் ''என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்'' (NKC Finance Private Limited) நிறுவனத்தின் கீழ் வெளி வருகிறது. தமிழில் வர்த்தக கட்டுரைகள் எழுத ஆர்வம் உள்ளவர்கள் 250 - 300 வார்த்தைகளுக்கு மிகையாகாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும்.



NKC Finance Private Limited
Board



Dr. E. Gnanam,
Chairman



Thiru. PL. Ramasamy,
Managing Director



Thiru. S.Chidambaram,
Joint Managing Director



Thiru. O. Somasundaram,
Director



Thiru. Sethuraman Sathappan,
Advisor

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

N K C Finance Private Limited

நம்பகமான, பாதுகாப்பான முதலீட்டுக்கு

எங்கள் கம்பெனியின் 10 சதவிகித வட்டியுடனான பாதுகாப்பான கடன் பத்திரங்கள்







பத்திரத்தின் தன்மை	பாதுகாப்பான கடன் பத்திரங்கள் (secured Non convertible Debentures)
வட்டி விகிதம்	10% p.a. (மூன்று மாதத்திற்கு ஒரு முறை)
குறைந்த பட்ச முதலீட்டு தொகை	ரூ.3,00,000/=
அதிக பட்ச முதலீட்டு தொகை	தலா ஒரு லட்சம் வீதம் ரூ.99 லட்சம் வரை
குறைந்த பட்ச முதலீட்டு காலம்	மூன்று வருடம்
அதிக பட்சம் முதிர்வு தேதி	30-09-2029 மூன்று வருடம் கடந்ததும் பத்திரத்தை மீட்டுக்கொள்ளும் வசதி உண்டு
முதலீட்டு காலத்திற்கு முன் திரும்பப்பெறும் வசதி	குறைந்த பட்சம் ஒரு வருடம் முடிந்திருக்கவேண்டும். ஒரு வருடத்திற்கு பிறகு மூன்று வருடங்களுக்குள் மீட்டுக்கொள்ளும் சமயம் 0.5 வட்டி பிடித்தம் செய்யப்படும்.
வருமான வரி	வருமான வரி சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு 10 சதவிகிதம் வரி பிடித்தம் செய்யப்படும். வரிவிலக்கு வேண்டுபவர்கள் தகுந்த விண்ணப்ப படிவம் கொடுத்து விலக்கு பெற்றுக் கொள்ளலாம்.


என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(RBI Registration No. N-07-00846)

பதிவு அலுவலகம் 25,
எழும்பூர் நெடுஞ்சாலை
எழும்பூர், சென்னை 600 008

Phone Numbers:
92800 85934 & 92800 85935
(Email: nkcfin18@gmail.com)
www.nkcfinance.com

(For Private Circulation only)



சிறப்புமிகு விருதை பெற்ற டாக்டர் A. வள்ளியம்மை மெய்யப்பன் அவர்களுக்கு பாராட்டுகள்!

அ. ஹூமாயூன்,
சிதம்பரம்



இந்திய வேளாண் பொறியாளர்கள் சங்கம் (Indian Society of Agricultural Engineers ISAE), புதுடெல்லி வழங்கும் "ISAE Commendation Medal 2026" என்ற சிறப்புமிகு விருதைப் பெற்றுள்ள டாக்டர் A. வள்ளியம்மை மெய்யப்பன் அவர்களுக்கு என்.கே.சி. e-magazine மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.



திருமதி. A. வள்ளியம்மை மெய்யப்பன் தம்பதியினர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரியில் துறைத்தலைவராக பணியாற்றி வரும் டாக்டர் A. வள்ளியம்மை மெய்யப்பன் அவர்கள், மண் மற்றும் நீர்வளப் பொறியியல் (Soil and Water conservation Engineering) துறையில் ஆற்றிய சிறப்பான மற்றும் மதிப்புமிக்க பங்களிப்பைப் பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மையின் வளர்ச்சியில் மண் மற்றும் நீர் மேலாண்மை மிக முக்கியமானதாகும். இத்துறையில் தொடர்ந்து பணியாற்றிவரும் டாக்டர் A. வள்ளியம்மை மெய்யப்பன் அவர்களின் அறிவியல் பணிகள், ஆராய்ச்சிகள் மற்றும் அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்துள்ள இந்த விருது, அவருடைய உழைப்பிற்கும் திறமைக்கும் கிடைத்துள்ள மிகச் சிறந்த அங்கீகாரம் ஆகும்.

இந்த விருது, ISAE-ன் 60வது ஆண்டு மாநாடு மற்றும் சர்வதேச கருத்தரங்கில், Sher-e-Kashmir University of Agricultural Sciences and Technology of Kashmir, Srinagar வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டுள்ளது.

அவரது அறிவுப் பணியும், ஆராய்ச்சி சேவையும் மேலும் சிறக்கவும், இதுபோன்ற பல உயரிய விருதுகளையும், பாராட்டுகளையும் தொடர்ந்து பெறவும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

OUR SERVICE :

- 24 Hours Emergency & Trauma Care
- 24 Hours Ambulance Service
- 24 Hours Laboratory
- Air Conditioned Private Rooms
- Air Conditioned General Ward
- Fully equipped ICU
- Maternity Care
- Major Operation Theatres
- X-Ray & Ultrasound
- Multi speciality Consultation
- Physiotheraphy & Rehabilitation
- Dental and Maxillofacial Surgery

WHY CHOOSE US

With 50+ years of trusted healthcare, we're a fully air-conditioned multispeciality hospital offering expert doctors, advanced facilities, and compassionate care—all under one roof.



MUTHU GROUP SINCE 1970

MUTHU HOSPITAL

Perambur

CONTACT US :

+91 7397 310 543
044 7962 0543

336, Paper Mills Road, Perambur

muthuhospitalperambur.com

NKC FINANCE PRIVATE LIMITED

(RBI REGISTRATION No.N-07-00846)

Registered & Corporate Office:
25/55 Egmore High Road, Egmore, Chennai 600008.
Phone Number: 044-26202064
Phone Numbers: 92800 85934, 92800 85935
Ponnamaravathi: 92800 85940
Email: nkcfin18@gmail.com, Website: www.nkcfinance.com

WE EXTEND THE FOLLOWING LOANS:



- Loan against Property at competitive rate of Interest. (Repayment up to 60 months)
- Business Loans (Short Term, Long Term and Line of Credit) against Property
- Instant Loan against Jewellery

» Basic Requirements: Acceptable CIBIL/CRIF Score, proof for Income/ Revenue Generation with 12 months Bank Statements.

» In Principle sanction will be given within 3 working days and regular Sanction will be given within 7 working days.

» Processing Charges, Pre-closing charges are the lowest. No hidden Charges. Simple Documents, quick decisions and Hassle-free procedures.



Quantum:

Rs. 5 Lakhs - Rs. 50 Lakhs



GNANAM.E
Chairman
PH-98843 82828



RAMASAMY.P
Managing Director
PH-92800 85934



CHIDAMBARAM.S
Joint Managing Director
PH-92800 85935



SOMASUNDARAM.O
Director
PH-93631 02923



SETHURAMAN SATHAPPAN
Advisor
PH-98204 51259


Senthoor
RESIDENCY
வீடுகள், அறைகள்
நாள் மற்றும் மாத
வாடகைக்கு விடப்படும்
17/2, Nethaji Road, Behind Mathoor Valagam, Near New Bus Stand,
KARAIKUDI - 630 003
Cell : 9994858735



PART-4

வங்கியல்லாத நிதி நிறுவனம்

(Non-Banking Financial Company(NBFC))

V.RAMASAMY, B.Com., F.C.A.
Chartered Accountant
COIMBATORE
ramsfca@gmail.com



'வைப்புத்தொகை' (Deposit) என்ற சொல் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934-இன் பிரிவு 45 I(bb)-இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. 'வைப்புத்தொகை' என்பது வைப்புத்தொகையாகவோ அல்லது கடனாகவோ அல்லது வேறு எந்த வடிவத்திலோ பெறப்படும் எந்தவொரு பணத்தையும் உள்ளடக்கும். ஆனால் பின்வருவன இதில் அடங்காது:

பங்கு மூலதனமாகத் (Share capital) திரட்டப்பட்டத் தொகை அல்லது ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகளால் மூலதனமாக வழங்கப்பட்டத் தொகை.

அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி, கூட்டுறவு வங்கி, வங்கி நிறுவனம், வளர்ச்சி வங்கி, மாநில நிதி நிறுவனம், IDBI அல்லது ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்பட்ட பிற நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டத் தொகை.

வணிகத்தின் சாதாரண போக்கில் பாதுகாப்பு வைப்பு (Security deposit), டீலர்ஷிப் வைப்பு, முன்பணம் (Earnest money), பொருட்கள், சொத்துக்கள் அல்லது சேவைகளுக்கான ஆர்டர்களுக்கு எதிராகப் பெறப்பட்ட முன்பணம்.

நிறுவன அமைப்பு அல்லாத (Body corporate), பதிவு செய்யப்பட்ட கடன் வழங்குபவரிடமிருந்து பெறப்பட்டத் தொகை.

சீட்டு' (Chit) தொடர்பாக சந்தாவாகப் பெறப்பட்டத் தொகை.

'பொது வைப்புத்தொகை' (Public Deposit) என்பது ரிசர்வ் வங்கியின் (NBFC பொது வைப்புத்தொகைகளை ஏற்றுக்கொள்வது) வழிகாட்டுதல்கள், 2025-இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. இது ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் கீழ் உள்ள வைப்புத்தொகைஎன்ற வரையறைக்குள் வரும், ஆனால் பின்வரும் தொகைகள் இதிலிருந்து விலக்கப்படுகின்றன:

மத்திய/மாநில அரசு அல்லது திருப்பிச் செலுத்துவதற்கு மத்திய/மாநில அரசு உத்தரவாதம் அளித்த பிற ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டத் தொகை; உள்ளூர் அதிகாரம் அல்லது வெளிநாட்டு அரசாங்கம்/ அதிகார அமைப்பிலிருந்து பெறப்பட்டத் தொகை.

இதற்காக ரிசர்வ் வங்கியால் குறிப்பிடப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டத் தொகை.

ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்திடமிருந்து பெற்றத் தொகை.

நிறுவனங்கள் சட்டம், 2013-இன் படி, பங்குகள் அல்லது பிணையங்களுக்கான சந்தாவாகப் பெறப்பட்டத் தொகை.

நிறுவனத்தின் இயக்குநர்களிடமிருந்து அல்லது ஒரு தனியார் நிறுவனத்தின் பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்டத் தொகை (அவர்கள் அந்தப் பணம் மற்றவர்களிடம் கடன் வாங்கித் தரப்படவில்லை என்று எழுத்துப்பூர்வமாக உறுதி அளிக்க வேண்டும்).

அசையாச் சொத்துக்கள் அல்லது நிறுவனத்தின் பிற சொத்துக்களை

அடமானம் வைத்து கடன்பத்திரங்கள் (Debentures) மூலம் திரட்டப்பட்டத் தொகை.

வழிகாட்டுதல்களின்படி, ஒரு வருடத்திற்கும் மேலான முதிர்வு காலம் கொண்ட மற்றும் ஒரு முதலீட்டாளருக்கு குறைந்தபட்சம் ₹1 கோடி மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள மாற்ற முடியாத கடன்பத்திரங்கள் (Non-convertible debentures) மூலம் திரட்டப்பட்டத் தொகை.

நிறுவனத்தை உருவாக்கியவர்கள் (Promoters) பிணையற்ற கடனாக (Unsecured loan) கொண்டு வந்தத் தொகை.

பரஸ்பர நிதியிடமிருந்து (Mutual fund) பெறப்பட்டத் தொகை.

60 மாதங்களுக்குக் குறையாத முதிர்வு காலம் கொண்ட ஹைப்ரிட் கடன்' (Hybrid debt) அல்லது சபார்டினேட்டட் கடன்' (Subordinated debt).

NBFC இயக்குநரின் உறவினரிடமிருந்து பெறப்பட்டத் தொகை.

வணிகத்தாள்கள் (Commercial Paper) மூலம் பெறப்பட்டத் தொகை.

ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி நிரந்தர கடன் கருவிகள்' (Perpetual debt instruments) மூலம் Middle Layer மற்றும் அதற்கு மேலுள்ள NBFC-களால் பெறப்பட்டத் தொகை.

உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தால் (IFC) வெளியிடப்பட்ட உள்கட்டமைப்புப் பத்திரங்கள் (Infrastructure bonds) மூலம் திரட்டப்பட்டத் தொகை.

சுருக்கமாகச் சொன்னால், சுயாதீனமான முடிவுகளை எடுக்கக்கூடிய விவரம் தெரிந்த கடன் வழங்குபவர்களிடமிருந்து திரட்டப்படும் நிதியை, 'பொது வைப்புத்தொகைஎன்ற வரையறையிலிருந்து இந்த வழிகாட்டுதல்கள் விலக்குகின்றன.

அந்தப் பட்டியலில் உள்ள சில முக்கியமான விலக்குகள் (Exclusions) குறித்து எளிய விளக்கங்கள் இதோ:

1. இயக்குநர்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து பெறப்படும் நிதி:

ஒரு தனியார் நிறுவனம் (Private Company) அதன் இயக்குநர்கள் அல்லது பங்குதாரர்களிடமிருந்து பணம் வாங்கினால்,

அது பொது வைப்புத்தொகைஆகாது. ஆனால், அந்தப் பணம் அவர்கள் வேறு எவரிடமும் கடன் வாங்கித் தரவில்லை என்று எழுத்துப்பூர்வமாக உறுதிமொழி (Declaration) அளிக்க வேண்டும். இது நிறுவனம் தனது சொந்த நபர்களிடமிருந்து நிதி திரட்டுவதை எளிதாக்குகிறது.

2.நிறுவனங்களுக்கு இடையிலான கடன் (Inter-corporate Deposits):

ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்திற்குத் தரும் கடன் பொது வைப்புத்தொகையாகக் கருதப்படாது. ஏனெனில், நிறுவனங்கள் நிபுணத்துவம் கொண்டவை என்பதால் அவை பொதுமக்களைப் போல ஏமாற்றப்பட வாய்ப்பில்லை எனக் கருதப்படுகிறது.

3. மாற்ற முடியாத கடன்பத்திரங்கள் (Non-Convertible Debentures - NCDs):

குறைந்தபட்சம் ₹1 கோடி முதலீடு செய்யக்கூடிய பெரிய முதலீட்டாளர்களிடமிருந்து, ஒரு வருடத்திற்கும் மேலான முதிர்வு காலத்துடன் திரட்டப்படும் NCD-கள் இதில் அடங்காது. பெரிய தொகையை முதலீடு செய்பவர்கள் சந்தை அபாயங்களை அறிந்திருப்பார்கள் என்பதால் இந்த விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

4. உறவினர்களிடமிருந்து பெறப்படும் பணம்:

ஒரு NBFC-யின் இயக்குநருடைய உறவினர்களிடமிருந்து (Relatives) பெறப்படும் நிதி பொது வைப்புத்தொகை அல்ல. இது குடும்ப உறுப்பினர்களுக்குள் நடக்கும் நிதிப் பரிமாற்றமாகவே பார்க்கப்படுகிறது.

5. அரசு மற்றும் வெளிநாட்டு நிதி:

மத்திய அல்லது மாநில அரசுகள் வழங்கும் நிதி, அல்லது வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் வெளிநாட்டு குடிமக்களிடமிருந்து பெறப்படும் நிதி ஆகியவை இதில் சேராது. இவற்றுக்குச் தனித்துவமான சட்டங்கள் மற்றும் உத்தரவாதங்கள் இருப்பதால் இந்த விலக்கு வழங்கப்படுகிறது.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
www.nkcfinance.com

92800 85940

We Listen You Prosper

என்.கே.சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(இந்திய ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற வங்கி சாரா நிதி நிறுவனம்)

NKC FINANCE PRIVATE LIMITED


நகை அடமானக் கடன்
தங்க நகைகள் தரம் பார்க்கும் வசதி

Gold, Silver Ornaments Testing Facility

Door No: 2/9B, பஜார் மெயின்ரோடு, INDANE GAS எதிரில்,
பொன்-புதுப்பட்டி - 622 407. பொன்னமராவதி.புதுக்கோட்டை மாவட்டம்.

ELEVATE YOUR WORLD.

Reliable. Efficient. Connected.



Get Free Quote:

7299012340, 9042967057, 6381361322

MUTHU GROUP
SINCE 1970

MAGNETECH
ELEVATORS PVT.LTD.



சீனியர் சிட்டிசன் மருத்துவ காப்பீடு ரினிவல்

நெற்குப்பை **சேதுராமன் சாத்தப்பன்**
Advisor,
NKC Finance Private Limited



சீனியர் சிட்டிசன்களுக்கு பென்ஷன் அல்லது டெபாசிட் வட்டி போன்ற வருமானங்களை தவிர வேறு வருமானம் இல்லாத சமயத்தில் அதாவது 60 வயதுக்கு மேல் மருத்துவ காப்பீடு ரினிவல் என்பது வருடா வருடம் விலைவாசி போல் ஏறிக்கொண்டே செல்கிறது. இதை எப்படி குறைப்பது என்று பார்த்தால் அதற்கு விடை இல்லாமல் இருந்தது. மருத்துவ காப்பீடு இல்லாமல் இருப்பதும் கடினம். சமீபத்தில் IRDAI (Insurance Regulatory and Development Authority of India) சீனியர் சிட்டிசன் மருத்துவ காப்பீடு ரினிவல் பிரீமியங்களுக்கு 10% தான் அதிகபட்ச வரம்பு என்று நிர்ணயித்துள்ளது:

இது வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற நடவடிக்கையாக இருந்தாலும், ரினிவலின் போது பிரிவுகளை மாற்றுவதன் மூலம் நிறுவனங்கள் காப்பீட்டு சலுகைகளைக் குறைக்காமல் இருப்பதை IRDAI உறுதி செய்ய வேண்டும் மற்றும் சீனியர் சிட்டிசன்களாகிய நீங்களும் கவனமாக பார்க்க வேண்டும், கண்டிஷன்களை படிக்க வேண்டும்.

மூத்த குடிமக்களின் சுகாதார காப்பீட்டு பிரீமிய உயர்வுகளுக்கு IRDAI யின் உச்சவரம்பு பயனுள்ளதாக இருக்குமா?

சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக சீனியர் சிட்டிசன் மருத்துவ காப்பீடு ரினிவல் பிரீமியங்களில் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை கூட அதிகரிப்பு குறித்த வளர்ந்து வரும் கவலைகளுக்கு மத்தியில், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) இத்தகைய கட்டுப்பாடற்ற வருடாந்திர உயர்வுகளைக் கட்டுப்படுத்தியுள்ளது வரவேற்கதக்கது தான்.

முதியோர் பிரீமியங்கள் குறித்த புதிய IRDAI விதிகள்

ஜனவரி 30 அன்று, ரினிவல் பிரீமியம் அதிகரிப்பு 10 சதவீதத்தை தாண்டக்கூடாது என்பதை உறுதிப்படுத்த காப்பீட்டு நிறுவனங்களுக்கு ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டது.

ஆயுள் அல்லாத மற்றும் சுகாதார காப்பீட்டு நிறுவனங்கள் சீனியர் சிட்டிசன் மருத்துவ காப்பீடு ரினிவல் பிரீமியங்களை ஆண்டுக்கு 10 சதவீதத்திற்கு மேல் திருத்த வேண்டாம் என்று அது அறிவுறுத்தியுள்ளது.

பாலிசியைப் புதுப்பிக்கும்போது அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறுவனங்கள் மாற்ற அனுமதிக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட நோய்களுக்கு துணை வரம்புகளை விதித்தல் அல்லது ஒரு நாளைக்கு அறை வாடகைக்கு வரம்புகளை விதித்தல் போன்றவை. காப்பீடு செய்யப்பட்டவர் பிரீமியத்தை செலுத்தும் வரை, மருத்துவ உரிமைகோரல் பாலிசி புதுப்பிக்கத்தக்கது, மேலும் காப்பீட்டாளருக்கு புதுப்பித்தலை தன்னிச்சையாக மறுக்க உரிமை இல்லை.

காப்பீட்டாளர்கள் மெடிக்கல் இன்சூரன்ஸை நிறுத்திவிட்டு, வாடிக்கையாளர்களை புதிய ஒன்றை வாங்க கட்டாயப்படுத்த முடியாது

மொத்தமாக பார்க்க போனால் இது வரவேற்கதக்க ஒன்றாகும்.



SENTHOOR LOCKERS

SAFE. SECURE. YOURS.

Sri Ram Nagar, Kottaiyur
Behind MED PLUS, 29/1, Trichy Main Road,
Sri Ram Nagar, Kottaiyur – 630106

SAFE.
SECURE.
YOURS.
YOUR BELONGINGS, OUR RESPONSIBILITY!

LOCKER DETAILS

SIZE (Inches)
14" x 20" x 22"
24" x 20" x 27"

SALIENT FEATURES

- **ADVANCED SECURITY** — Digital Lock with Personal Access
- **24/7 CCTV SURVEILLANCE** — Complete Safety Round the Clock
- **FIRE SAFE MATERIAL** — High Quality Steel – Fire & Rust Resistant
- **AIR-CONDITIONED LOCKERS** — Proper Air Circulation to Keep Belongings Fresh
- **CLEAN & HYGIENIC** — Regular Cleaning for a Better Experience
- **MEMBER SUPPORT** — Friendly Assistance Whenever You Need

9363002923
7010407383